# தலைவரின் முடிவும் - தொண்டர்களின் மனதும்!

தேர்தல் முடிவுகளால் நிலைகுலையாத இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இந்தியாவின் அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் வலிமை கொண்ட தி.மு.க.வின் தலைமைச் செயற்குழு 22-8-2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கூடியது. அதில் கழகத் தலைவர் ஆற்றிய உரையும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் தி.மு.க.வின் கடைக்கோடித் தொண்டர்களின் மனதில் உள்ள உணர்வை வெளிப்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளன.

**தலைவர் எடுத்த முடிவும் தொண்டர்களின் மனதும் ஒரே அலைவரிசையில் இருப்பதைத் தலைமைச் செயற்குழு உறுதி செய்துள்ளது.**

**தலைவர் முடிவு**– தலைமுறைகளைக் கடந்து 75 ஆண்டுகாலமாகக் கழகம் நிலைத்து நிற்பதற்கு காரணம் அதன் அமைப்பு பலம்தான் என்பதை தனது உரையில் எடுத்துக்காட்டிய கழகத் தலைவர், கழகத்தின் அமைப்பு முறையில் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். கிளைக்கழகம் முதல் மாவட்டக் கழகம் வரை கழகத்தின் அமைப்பு முறையில் உரிய மாற்றங்கள் கொண்டு வருவதற்கானத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தொண்டர்கள் மனது**– "இதை..,இதை.. இதைத்தான் எதிர்பார்த்தோம்" என்று தமிழ்நாடு முழுவதுமுள்ள தொண்டர்கள் இந்த முடிவுகளை மனதார வரவேற்கிறார்கள். தகுதியுள்ள கழகத் தொண்டர்கள் கட்சியில் பொறுப்பான பதவிகளுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். கழகத் தலைமை நிறைவேற்றியுள்ள அமைப்பு சீரமைப்பு என்கிற தீர்மானம் தொண்டர்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது.

**தலைவர் முடிவு**– தலைமைச் செயற்குழுவில் ஆற்றிய உரையில் கழகத் தலைவர் அவர்கள், "மாவட்டச் செயலாளர் ஒருவரால் மட்டுமே கழகம் வளர்ந்து விடாது" என்பதை வெளிப்படையாக எடுத்துக்கூறி, கொள்கையில் உறுதியாக செயல்படக்கூடிய நிர்வாகிகள்கூட, பல இடங்களில் தொண்டர்களை புறக்கணித்ததால் தேர்தலில் தி.மு.க தோல்வியை சந்திக்க நேரிட்டது என்று கூறினார்.

**தொண்டர்கள் மனது**– "நாங்க மனதுக்குள் நினைத்ததை நீங்க வெளிப்படையா பேசிட்டீங்க தலைவரே" என்பதுதான் தொண்டர்களின் குரல். கழகத்தின் அனைத்து மாவட்டச் செயலாளர்களும் அப்படி இருப்பதில்லை என்பது எந்தளவு உண்மையோ, அதே அளவுக்கு, தலைவர் சொன்னது போல செயல்படக் கூடிய மாவட்ட- ஒன்றிய- நகர- பேரூர் கழகச் செயலாளர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தொண்டர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறார்கள். தங்களின் மனதை வெளிப்படுத்திய தலைவரின் உரையைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், மாவட்டச் செயலாளராக 3 முறை மட்டுமே இருக்க முடியும். ஒன்றிய-நகர-பேரூர்-கிளைக் கழகச் செயலாளர்களாக 2 முறை மட்டுமே இருக்க முடியும் என்பது நிறைவேற்றப் பட்டிருப்பதுடன் வயது வரம்பும் அந்தத் தீர்மானங்களில் குறிப்பிட்டிருப்பது தொண்டர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**தலைவர் உரை**– "படைக்கு இளையோர் வரும்போது, அவர்களை மூத்தோர் வரவேற்று வழிநடத்துவதுதான் படைக்கு அடையாளம்" என்ற முத்திரைச் சொற்றொடரை தலைவர் தனது உரையில் பதிவு செய்தார். தி.மு.க என்பதே இளைஞர்களால் தொடங்கப்பட்ட இயக்கம். காலந்தோறும் இளைய இரத்தம் பாய்கின்ற இயக்கம். அதனால்தான், கழகம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் கடந்த நிலையில், 1980ஆம் ஆண்டு இளைஞரணி தொடங்கப்பட்டது. அதனை வழிநடத்தியவர் நம் கழகத் தலைவர். அதனால்தான், 75 ஆண்டுகால இயக்கத்துக்கு இளம் இரத்தம் பாய்ச்சும் வகையில் கழக நிர்வாகிகளின் பதவிக் காலத்திற்கு வயது வரம்பை நிர்ணயித்துத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்.

**தொண்டர்கள் மனது**– கழகத்தில் ஆர்வமாகப் பணியாற்றும் இளைஞர்களுக்கு இளைஞரணி உள்ளிட்ட கழகத்தின் சார்பு அணிகளில் பணியாற்றும் வாய்ப்பு கிடைப்பது போல, முதன்மைக் கழகத்தின் அமைப்புகளிலும் இளைஞர்களுக்குரிய அளவில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதே தொண்டர்களின் எதிர்பார்ப்பாகும். அதற்கேற்பவயது வரம்புநிர்ணயிக்கப் பட்டிருப்பதுடன், வட்டம், பகுதி, நகரம், ஒன்றியம் ஆகியவற்றில் வாக்காளர் எண்ணிக்கைக்கேற்ப செய்யப்படவுள்ள மாற்றங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை அளிக்கும் என்பதால் தங்கள் உணர்வைப் புரிந்து தலைவர் செயல்பட்டிருப்பதை சமூக வலைத்தளங்களில் இளைஞர்கள் வெளிப்டையாகவே பதிவிட்டு வருகின்றனர்.



**தலைவர் உரை**– "ஒவ்வொரு தொகுதியா பார்த்து குறைகளைக் கண்டுபிடிச்சு ஆள மாத்துறத விட, முழுமையான ஒரு சுயபரிசோதனை வேணும்னு நான் முடிவெடுத்தேன். இதெல்லாம் கடுமையானதாதான் இருக்கும். சிலருக்கு கசப்பானதாகவும் இருக்கும். கசப்புதான் உடம்புக்கு நன்மை செய்யும்" என்று தலைமைச் செயற்குழுவில் தலைவர் உரையாற்றினார். கழகத்திற்குக் கசப்பு மருந்து தேவைப் படும் காலம் இது என்பதைத் தொண்டர்களின் உணர்விலிருந்து உணர்ந்த தலைவரின் சொற்கள் இவை.

**தொண்டர்கள் மனது**– கழகத்தின் அடி முதல் நுனி வரை உரியளவில் மாற்றங்கள் தேவை என்பதுதான் தொண்டர்களின் மனது. சமூக நீதி இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இளைஞர்கள், பெண்கள், சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் கழகப் பொறுப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே தொண்டர்களின் குரலாகும். அந்தக் குரலைத் தலைமைச் செயற்குழுவில் கழகத் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேச அனுமதிக்கப்பட்ட நிர்வாகிகள் சிறப்பாக எடுத்துரைத்தனர். தொண்டர்களின் மனதை தலைமைக்கு மட்டுமின்றி, தலைமைச் செயற்குழுவுக்கும் தன் பாணியில் தலைவர் எடுத்துரைத்தது தொண்டர்களுக்குப் பெரும் நம்பிக்கைளை உண்டாக்கியுள்ளது.

**தலைவர் முடிவு**– கழகத்தின் அமைப்பு முறையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் அடிப்படையில் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தப்பதற்கு கட்சித் தேர்தல் நடத்தப்படும் என்றும், தேர்தலை நடத்துவதற்கேற்ப புதிய உறுப்பினர்களை நேர்மையான முறையில், உண்மையான எண்ணிக்கையில் சேர்க்க வேண்டும் என்றும் தலைவர் தனது உரையில் தெரிவித்தார். உட்கட்சி ஜனநாயகத்தில் இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரின் அறிவிப்பும், அதற்கேற்ற தீர்மானங்களும் தேசிய அளவில் கவனம் பெற்றுள்ளன.



கோவி.லெனின்
தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

**தொண்டர்கள் மனது**– கழகத்தின் உறுப்பினர் என்பதற்கு ஆதாரமான உறுப்பினர் அட்டையைப் பெறுவதே வாழ்நாள் இலட்சியம் என நினைக்கும் கழகத் தொண்டர்களுக்கு, தலைவரின் இந்த அறிவிப்பு பெரும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது. நியாயமான உறுப்பினர்களுடன், நேர்மையான உள்கட்சித் தேர்தலைக் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுத்திருப்பது தொண்டர்களுக்கு நம்பிக்கையைப் பெருக்கியுள்ளது.

**தலைவர் முடிவு**– "எதிர்க்கட்சிகளைப் பார்த்தா மலர்ற முகம் , நம்ம கட்சிக்காரங்களைப் பார்த்தா மலர்றது இல்லை. எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்தா வணங்குற கை, நம்ம கட்சிக்காரங்களைப் பார்த்தா வணங்குறதில்லை" என்று செயற்குழுவில் கழகத் தலைவர் பேசியபோது, அரங்கம் முழுவதும் எழுந்த கைத்தட்டல் அடங்க சில நிமிடங்களாயின. தலைவரின் சொற்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில், செயற்குழுவில் பேசுகின்ற வாய்ப்புப் பெற்றவர்களும் இதையே வலியுறுத்தினர். குறிப்பாக சட்டமன்ற நிகழ்வுகளை சுட்டிக்காட்டிப் பேசினர்.

**தொண்டர்கள் மனது**– கழகத் தொண்டர்களைப் போலவே ஒவ்வொரு நாளும் சட்டமன்ற நிகழ்வுகளை நேரலையில் முழுமையாகக் கவனிக்கிறார் கழகத் தலைவர். அதனால் தலைமைச் செயற்குழுவில் அவை தொடர்பான கருத்துகளைத் தலைவர் முழுமையாக அனுமதித்தார். கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் தனது நிறைவுரையில், தொண்டர்களின் மனதைப் பிரதிபலிக்கும் வகையில் சட்டமன்ற நிகழ்வுகள் குறித்து தனது அனுபவங்களை உரையாக வழங்கினார். கழகத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் இது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. முன்னாள் முதல்வரும்-கழக சட்டமன்ற உறுப்பினருமான ஓ.பி.எஸ். அவர்கள் சொன்னது போல, கழகத் தலைவரின் தலைமைச் செயற்குழு உரையைக் கிளைக் கழகங்கள் வரை தொடர்ந்து ஒளிபரப்ப வேண்டும் என்பதே தொண்டர்களின் மனநிலை.

### நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன!

# சட்டமன்றத்தில் ஆக்கப்பூர்வமான பிரச்சினைகளை விவாதிக்க வேண்டும்!

## திராவிடர் கழக தலைவர் கீ.வீரமணி பேட்டி!

சிவகங்கை. ஆக.24–

சிவகங்கையில் திராவிடர் கழகத்தின் சார்பில் எதிர் நீச்சலில் வென்ற பெரியார் 80வது ஆண்டு திறந்தவெளி மாநாடு சண்முக ராஜா கலையரங்கில் நடைபெற்றது.

இதில் பங்கேற்பற வந்த திராவிட கழகத்தலைவர் கீ. வீரமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது.



நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக புகார்கள் தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது.

தமிழக மற்றுமின்றி பல்வேறு மாநிலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள் .

இது ஒரு மிகப்பெரிய தவறான முடிவாகும். எனவே நீட் தேர்வை ரத்து செய்யப்பட்டு முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் வரவேற்கத்தக்கது.

ஆனால் மாற்றம் என்பது மக்களை ஏமாற்றும் வகையில் அமையக்கூடாது . போராட்டத்தில் ஈடுபடுவோரை தடுக்க அவருக்கு ஆதரவாக செயல்படுபவர்களின் பட்டியலை எடுக்குமாறு கணக்கெடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவூறுத்தப் பட்டுள்ளது.

விட்டுள்ளது.இது தலைமைச் செயலாளர் பிறப்பித்த உத்தரவு என்று கூறுகிறார்கள். இதில் தலைமைச் செயலாளர் தனியாக செயல்பட் டாரா. அல்லது முதல்வர் விஜய் கூறி செயல்பட்டாரா என்பதை பொதுமக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தெளிவாக விளக்கிட வேண்டும். ஊழல் இல்லாத அரசு என்பது குறித்து வரவேற்கத்தக்கதாகும் ஊழல் என்பது லஞ்சம் பெறுவது மட்டுமில்லை. தவறான நடவடிக்கையுமே ஊழல் என்று கருதப்படும் .தேர்தல் முறையில் மாற்றம் தேவை என்று மக்கள் கருதுகிறார்கள். சட்டப்பேரவை நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புவது வரவேற்கத்தக்கது ஆனால் அங்கு நிகழும் நிகழ்ச்சிகள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப் பட்டாலும் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. எனவே ஆளுங்கட்சி எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் சட்டசபையில் நடந்து கொள்ள வேண்டும் .சட்டசபை என்பது மக்கள் பிரச்சனை விவாதிக்கப்படும் இடமாக இருக்க வேண்டும் .

தனிப்பட்ட காழ்ப் புணர்ச்சியில் பேசும் இடமாக மாறக்கூடாது.

இவ்வாறு கீ.வீரமணி கூறினார்.

தொடர்ந்து சண்முகராஜா கலையரங்கில் கீ. வீரமணி தலைமையில்எதிர்நீச்சலில் பெரியார் நடை பெற்ற 80வது ஆண்டு விழா திறந்தவெளி மாநாட்டில் தலைமையேற்று சிறப்புரை ஆற்றினார்.

மாவட்ட திராவிட கழக தலைவர்ச.அனந்த வேல் வரவேற்று பேசினார். மாவட்டச் செயலாளர்கள் பெரு.ராஜாராம்,சி.செல்வமணி,பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. புகழேந்தி , மணிமேகலை சுப்பையா,காரைக்குடி மாவட்ட தலைவர் வைகறை, க.வீ.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வைத்தார்கள். வழக்கறிஞர் ச.இன்பநாதன் மாநாட்டினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தந்தை பெரியார் படத் தினை கழக காப்பாளர் சாமி திராவிட மணி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திருமலை முத்து ராமலிங்கம் வாழ்த்துரை வழங்கினார் . இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், பொதுக்குழு உறுப்பினர் கரு.அசோகன் ,துணைச் செயலாளர் வில்லிபட்டி ராமமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், வழக்கறிஞர் ஆதி.அழகர் சாமி வர்த்தக அணிஅனிபா, தி. என்னா ரெஸ் பிராட்லா உட்பட மாவட்ட முழுவதும் இருந்து திராவிட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.தி.க. மாவட்ட துணை செயலாளர் தங்கராஜன் நன்றி கூறினார்.

# நீதியரசர் ஏ.கே.ராஜன் கமிட்டி அறிக்கை நூல் வெளியீடு!

## டாக்டர் சுபேர்கான் — இந்திரகுமார் தேரடி சிறப்புரை!

சென்னை,ஆக.24-

நம் சமூகத்தின் எதிர்காலத்தையும் நீதிக்கு எதிரான போராட்டத்தையும் பேசும் ஒரு பொன்னான நிகழ்வாக நீட் தேர்வின் தாக்கத்தை விரிவாக ஆய்வு செய்து அளிக்கப் பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க "நீதியரசர் ஏ.கே.ராஜன் கமிட்டி அறிக்கை" நூல் வெளியீட்டு விழா

22.8.2026 - சனிக்கிழமையன்று மாலை 5 மணியளவில் அரும்பு அரங்கம், தேனாம்பேட்டை, சென்னை (அண்ணா அறிவாலயம் அருகில்) நடைபெற்றது.

இந்நிகழ்வில் டாக்டர் சுபேர்கான் (செயலாளர் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு), இந்திரகுமார் தேரடி (ஊடகவியலாளர்), சரண்யா நடராஜன் (வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்), கு.பா. ஈஸ்வர் மூர்த்தி (தமிழ் மாணவர் மன்றம்) ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்ச்சியை குயிலன் தொகுத்து வழங்கினார்.

யாழ் திலீபன் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் நீதிக்காக குரல் கொடுக்கும் உணர்வாளர்கள் பங்கேற்றனர்.

# சிவகங்கையில் த.வெ.க. அமைச்சர் - எம்.எல்.ஏ. மோதல் நீடிப்பு!

சிவகங்கை.ஆக24 .

நேற்று முன் தினம் சிவகங்கையில் கடந்த கால தி.மு.கஆட்சியில் ரூபாய் 9.32 கோடியில் கல்லூரி 150 மாணவ மாணவிகள் தங்கும் விடுதி ,கிருங்கா கோட்டை அமராவதி புதூர் ஆகிய ஊர்களில்ருபாய் 77.89 லட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவுசார் மைய கட்டிடங்கள் ஆகியவைகள் திறப்பு விழா மாவட்ட ஆட்சியர்ப.ஆகாஷ் தலைமையில் சிவகங்கையில் நடைபெற்றது. இதில் காரைக்குடி சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ மற்றும் அமைச்சர் டி .கே. பிரபு கட்டிடங்களை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். சிவகங்கையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு சிவகங்கை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திருமதி குழந்தை ராணி நாச்சியாருக்கு முறையான அழைப்பு கொடுத்தும் அவர் பங்கேற்காமல் புறக்கணித்தார். இதற்கு காரணம் தான் எம்.எல்.ஏ ஆனவுடன் அமைச்சராகலாம் என்ற கனவில் இருந்தார். காரைக்குடி எம்.எல்.ஏ டி .கே .பிரபு அமைச்சரானதிலிருந்து அவர் கட்சியின் மீது அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது. தொடர்ந்து அமைச்சர்பங்கேற்கும் நிகழ்ச்சியை புறக்கணித்து வருகிறார். .மேலும் நேற்று சிவகங்கை யில் நடைபெற்ற முக்கிய மான அரசு நிகழ்ச்சியில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்காதது கட்சி தொண்ட ர்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. இதேபோல் சிவன் கோவில் அருகே 100 நாள் சாதனை பட்ஜெட் விளக்க பட்ஜெட் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் எம்.எல்.ஏ குழந்தை ராணி மற்றும் நிர்வாகிகள் சிறப்புரையாற்றினார்கள் . மாவட்ட அமைச்சராக உள்ள டி.கே.பிரபு பங்கேற்கவில்லை. அவரது பெயர் படம் பொதுக்கூட்டத்தில் வைக்கப் பட்டிருந்த பிளக்சில் இடம் பெறவில்லை. சிவகங்கை எம்.எல்.ஏ விற்காக வைக்கப்படும் பிளக்சில் தொடர்ந்து கடந்த மூன்று மாதங்களாக மாவட்ட அமைச்சர் படம் ,பெயர் இடம் பெறுவதில்லை. அமைச்சருக்கும் எம்.எல்.ஏ விற்கும்நடைபெறும் கோஷ்டிமோதல் தொண்டர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கட்சியினர் மிகவும் அதிருப்தியில் உள்ளார்கள்.அமைச்சர் பங்கேற்ற அரசு நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாச சேதுபதி , மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் ஆகியோரும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



முன்னாள் ஒன்றிய அமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக சட்டத்திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் பொள்ளாச்சி கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. முத்து, மயூரா சுப்ரமணியம், கௌதமன் ஆகியோர் முன்னிலையில், தர்மராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது, நிகழ்வில் நாச்சிமுத்து, மணிமாறன் தென்றல், ஆகிமூர்த்தி, இரும்பு சுப்பிரமணியம் , வடிவேல், பி.ஏ.செந்தில்குமார் சு. தங்கவேல் , சிராஜுதீன் , பிரதீப் குமார், சதீஷ், அவினேஷ் கார்த்திக், செந்தில்ராஜ், தர்மலிங்கம் , ரஞ்சித், ராஜ்பிரபு, புல்லட் ராஜா சபாரி சாகுல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக.24-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை கூட்டம் குறித்து ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் அறிவிப்பு வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், நாளை 25.8.2026 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனை கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்களும் மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களும் கலந்துக் கொண்டு சிறப்புரை யாற்றயுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பொருள்: 28.08.2026 அன்று நடைபெறும் மாமன்ற கூட்டம் தொடர்பாக.

இவ்வாறு ஆளுங்கட்சி மன்ற கொறடா எ.நாகராஜன் தெரிவித்துள்ளார்.